**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.68/2024 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு. இராமன் |
| Husband/Father Name | மாதவப்ப ரெட்டி |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 58 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த வழக்கில இறந்த சக்திவேல் எனக்கு தம்பி மகன் ஆவார். அசா.1 செந்தில்குமார் எனக்கு மருமகள். அசா.4 எனது தம்பி மனைவி. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு தம்பி மகன் சக்திவேல் JCB வண்டியை மகேந்திரவாடியிலிருந்து காவேரிப்பாக்கத்திற்கு செல்வதற்காக சிறுவளையம் வழியாக சென்றார்.

அப்போது அருள் என்பவரும் அவரது மகன் மற்றும் அவரது சித்தப்பா மகன் ஆகியோர் மற்றும் செல்வம் மகன் மற்றும் பூக்கடைக்காரர் மகன் நந்தக்குமார் ஆகியோர்களை அழைத்து சென்று என் தம்பி மகன் ஓட்டி சென்ற JCB வண்டியை சிறுவளையத்தில் மடக்கி அருள் என்பவர் கத்தியால் சக்திவேலை தலையின் மீது வெட்டியுள்ளார்.

பிறகு பூக்கடைகாரர் மகன் நந்தக்குமார் சக்திவேலை கொம்பால் அடித்துள்ளார். என் மருமகன் செந்தில் குமார் அவர்களை

தடுக்க முற்பட்ட போது நீ கிட்ட வந்தால் உன்னையும் பலிபோட்டு விடுவோம் என்று கூறியுள்ளார்கள். காயம் பட்ட சக்திவேலை என்னுடைய மருமகன் செந்தில்குமார் வாலாஜா அழைத்து சென்ற பிறகு மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பிறகு நான் அங்கு செல்வதற்கு முன்பு சக்திவேலின் பிரேதம் வீட்டிற்கு வந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இறந்த சக்திவேல் எனது தம்பி மகன் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காயம் பட்ட உடன் சக்திவேலை மருத்துவமனைக்கு சென்று பார்ப்பதற்குள் மதியம் 3.00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டது. முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் எனது மருமகன் செந்தில் கூறி தான் எனக்கு தெரியும் மற்றபடி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது.

எனது தம்பி மகன் சக்திவேல் காலில் அடிப்பட்டதால் வீட்டில் இருப்பார் என்று சொன்னால் சரிதான். சக்திவேலால் எந்த வண்டியும் ஓட்ட முடியாது என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. JCB வண்டியியல் உள்ள ஆக்சலரேட்டரையும், பிரேக்கையும் அவர் கையாலேயே போட்டுக்கொள்வார் .

மறு விசாரணை இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.05 18:14:26 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.